**சார்பு நீதிமன்றம், வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம்**

**முன்னிலை :** B. ராஜா, பி.ஏ., பி.எல்.,

சார்பு நீதிபதி, வாணியம்பாடி.

2025 ஆண்டு ஜூன் மாதம் 13 ம் நாள் வெள்ளிக்கிழமை

(2056 திருவள்ளுவர் ஆண்டு, ஸ்ரீ விசுவாவசு வருடம் வைகாசி திங்கள் 30 ம் நாள்)

**இடைநிலை மனு எண்.6/2024**

**in**

**அசல் வழக்கு எண்.65/2015**

1. லட்சுமணன்
த/பெ பூங்காவனம் ..... மனுதாரர் /1ம்பிரதிவாதி
2. கம்சலா
க/பெ. லட்சுமணன்
3. பெருமாள்
த/பெ லட்சுமணன்
4. தமிழரசி
த/பெ லட்சுமணன்
5. கலைவாணி
த/பெ லட்சுமணன்
6. சபரின்
த/பெ லட்சுமணன்
7. விஸ்வநாதன்
த/பெ லட்சுமணன்
8. வில்வநாதன்
த/பெ லட்சுமணன் ...... மனுதாரர்கள் / கட்சி சேர்க்கப்படவேண்டிய நபர்கள்

/ எதிர் /

1. பாத்திமா
க/பெ தமிழரசன்
2. ரீட்டா
க/பெ சார்லஸ் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது இறுதியாக, கடந்த 05.06.2025ம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. கே.உமர், அவர்கள் ஆஜராகியும், 1,2

எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஏ.சி.தேவக்குமார், அவர்கள் ஆஜராகியும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த மனுக் கோப்பு ஆவணங்கள் அனைத்தையும் கவனமாக பரிசீலனை செய்து, இருதரப்பு வாதங்களையும் கேட்டறிந்து, இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும் ....

**<u>உத்தரவு</u>**

01) அசல் வழக்கில் கட்சி சேர்க்கப்பட்டுள்ள 1ம் மனுதாரர், காணாமல் போய் உள்ளதால், அவருடைய சட்டப்படியான வாரிசுகளான 2 முதல் 8 மனுதாரர்களை அசல் வழக்கில் பிரதிவாதிகளாக கட்சி சேர்க்கவேண்டும் என்ற பரிகாரத்திற்காக உரிமையியல் விசாரணை நடைமுறைசட்டம் கட்டளை 6 விதி 17ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>02) மனுவிற்கான பிரமாணப் பத்திரத்தின் சுருக்கம் :–</u>**

அசல் வழக்கினை எதிர்மனுதாரர்கள் 1ம் மனுதாரர் மற்றும் பலருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார். வழக்கு விசாரணை நிலுவையில் இருக்கும்போது, கடந்த 01.02.2022ம் தேதி முதல் 1ம் மனுதாரர் காணாமல் போய் உள்ளார். அதுகுறித்து ஆம்பூர் நகர காவல் நிலையத்தில் குற்ற எண்.103/2022ல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது.

தாவா சொத்தில் 2 முதல் 8 மனுதாரர்களுக்கும், சட்டப்படியாக உரிமை உள்ளது. இந்நிலையில், 1ம் மனுதாரர் காணாமல் போய் உள்ளதால், அவருடைய சட்டப்படியான வாரிசுகளான 2 முதல் 8 மனுதாரர்களை அசல் வழக்கில் பிரதிவாதிகளாக கட்சி சேர்ப்பதற்கு அனுமதி வேண்டுமென மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>03) எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:–</u>**

மனுச் சங்கதிகள் பொய்யானவை, தவறானவை. எதிர்மனுதாரர்கள்

ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர, மற்றவற்றை மனுதாரர்கள் நிரூபிக்கக் கடமைப்பட்டுள்ளனர்.

மனுதாரர்கள் தரப்பில் அ.வ.எண்.47/2015ல் இதே பரிகாரத்திற்காக மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. மற்றொரு வழக்கான அ.வ.எண்.12/2017ல் மனுதாரர்கள் இதேபோன்ற மனு எதையும் தாக்கல் செய்யவில்லை.

அசல் வழக்கில் இறந்துள்ள சிவலிங்கம் என்பவரது வாரிசுகளை மனுதாரர்கள் வழக்கில் கட்சி சேர்க்கவில்லை. மனுவில் குறிப்பிட்டுள்ள முதல் தகவல் அறிக்கை உண்மையானது கிடையாது.

மனுதாரர்கள் அசல் வழக்கில் என்ன காரணத்திற்காக கட்சி சேர்க்கவேண்டும் என மனுவில் தெளிவாக குறிப்பிடவில்லை. மனுப்பரிகாரத்திற்கான சட்டப்பிரிவு தவறானது. ஏற்கனவே நிலுவையில் உள்ள பல்வேறு மனுக்களில் மனுதாரர்களை கட்சி சேர்க்காமல், அசல் மனுவில் மட்டும் மனுதாரர்களை கட்சி சேர்க்க வேண்டும் என முன்வைக்கப்பட்டுள்ள மனுப்பரிகாரங்கள் சட்டப்படி செல்லாது.

ஆகையால், பொய்யான காரணங்களின் அடிப்படையில், தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவினை தள்ளுபடி செய்து உத்தரவிடவேண்டும்.

04) இம்மனுவினை பொறுத்த வரையில் மனுதாரர்களுக்கு மனுப் பரிகாரம் கிடைக்கக்கூடியதா ? இல்லையா ? என்பது இந்நீதிமன்றத்தால் முடிவு காண வேண்டிய தீர்வுக்குரிய பிரச்சனை ஆகும்.

<u>05) பிரச்சனைக்குரிய தீர்வு</u>

இருதரப்பிலும் எந்தவொரு வாய்மொழி சாட்சியமும், ஆவணச் சான்றுகளும் இந்நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவில்லை. இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதங்களை கேட்டு, வழக்கு கோப்பு

ஆவணங்கள் அனைத்தையும் இந்நீதிமன்றம் கவனமாகப் பரிசீலனை செய்துள்ளது.

அசல் வழக்கானது ஏற்றதை ஆற்றுக பரிகாரத்திற்க்காக 1ம் மனுதாரர் மற்றும் பலருக்கு எதிராக எதிர்மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு விசாரணை நிலுவையில் உள்ளது. இந்நிலையில், வழக்கு விசாரணை நிலுவையில் இருக்கும்போது, 1ம் மனுதாரர், காணாமல் போய் உள்ளதால், 2 முதல் 8 மனுதாரர்களை 1ம் மனுதாரரின் சட்டப்படியான வாரிசுகளாக அசல் வழக்கில் பிரதிவாதிகளாக கட்சி சேர்க்க வேண்டும் என்ற பரிகாரத்திற்காக மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையில், அசல் வழக்கில் கட்சி சேர்க்கப்பட்டுள்ள 1ம் மனுதாரர் கடந்த 01.02.2022 தேதி முதல் காணாமல் போய் உள்ளார் என்ற சங்கதியையும், அது தொடர்பாக ஆம்பூர் நகர காவல் நிலையத்தில் குற்ற எண்.103/2022ல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளதையும், வன்மையாக மறுத்து எதிர்வாதம் செய்யப்படவில்லை.

வழக்கில் கட்சி சேர்க்கப்பட்டுள்ள 1ம் மனுதாரர் காணாமல் போய் உள்ள நிலையில், அவரின் சட்டப்படியான வாரிசுகளான 2 முதல் 8 மனுதாரர்கள் அசல் வழக்கில் பிரதிவாதிகளாக கட்சி சேர்க்கப்பட்டு, வழக்கினை தொடர்ந்து நடத்த அனுமதி வழங்குவதால் எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிர்வாதம் எவ்வகையிலும், பாதிப்படைய வழியில்லை.

ஆகையால், மேற்கண்டவாறு இந்நீதிமன்றத்தால், விவரிக்கப்பட்டுள்ள காரணங்களினால், மனுதாரர்களுக்கு மனுப் பரிகாரம் கிடைக்க கூடியது என முடிவு செய்யப்பட்டு, மனுப்பிரச்சனை இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

**06 ) முடிவில்**, மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2025ம் ஆண்டு ஜூன் மாதம் 13ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RAJA B Digitally signed by RAJA B Date: 2025.06.13 13:11:06 +0530

சார்பு நீதிபதி,
வாணியம்பாடி.

**<u>மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :-</u>**

இல்லை

RAJA B Digitally signed by RAJA B Date: 2025.06.13 13:11:13 +0530

சார்பு நீதிபதி,
வாணியம்பாடி.